**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 55** **நாள்: 15.05.2017**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அடுக்குமாடி குடியிருப்பில் மக்கும், மக்காத குப்பை பிரித்தெடுத்தல் குறித்து விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதார கல்வித்துறை சார்பாக, தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் குப்பைகளை மக்கும் மற்றும் மக்காத குப்பை என்று தரம் பிரித்தல், பொதுமக்களின் ஒத்துழைப்புடன் மக்கும் குப்பைகளை உரமாக்குதல், திறந்தவெளி கழிப்பிடத்தை உபயோகப்படுத்துவதனால் ஏற்படும் சுகாதார கேடுகள் போன்றவை குறித்து கல்வி நிறுவனங்கள், குடிசைப்பகுதிகள், உணவு விடுதிகள், குடியிருப்புகள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகள் போன்ற இடங்களில் பெருநகர மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் தொடர்ந்து விழிப்புணர்வு எற்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, அம்பத்தூர் மண்டலத்தில் உள்ள 430 வீடுகள் கொண்ட கோச்சர் பஞ்சஸீல் என்ற அடுக்குமாடி குடியிருப்புவாசிகளிடம் குப்பைகளை மக்கும், மக்காத குப்பை என்று தரம் பிரித்தலின் அவசியம் குறித்தும், மக்கும் குப்பைகளை இயற்கை உரமாக தயாரித்து உபயோகப்படுத்தும் முறை குறித்தும், முறையாக சோப்பு தேய்த்து கைகழுவுவதன் மூலம் தவிர்க்கப்படும் நோய்கள் பற்றியும், விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் விநியோகித்து விளக்கப்பட்டது. அடுக்குமாடி வளாகத்தில் விழிப்புணர்வு பேனர்கள், பதாகைகளுடன் குடியிருப்புவாசிகள், தன்னார்வ தொண்டர்கள், மாநகராட்சி ஊழியர்கள் ஆகியோர் பங்குபெற்ற விழிப்புணர்வு பேரணி CTH சாலையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சுகாதார கல்வி அலுவலர் முனைவர்.டி.ஜி.சீனிவாசன், மண்டல அலுவலர் திரு.பாலசுப்பிரமணியம், செயற்பொறியாளர் திரு.நாச்சன், உதவி செயற்பொறியாளர் மற்றும் சுகாதாரத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**